# தமிழ் முரசு

ஆறாவது புத்தகம்

பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞான கிராமணி

விலை நான்கணா

வெளிநாடு ஐந்தணா

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை—1

# தென்றல்

(பதிப்பாசிரியர் குயிலன்)

அடுத்த வெளியீட்டில்

குயிலன்
ம. பொ சிவஞானம்
வல்லிக்கண்ணன்
வி. பி. சுப்பிரமணியம்
துருவன் மற்றும் பலர்
எழுதியுள்ளார்கள்.

ஒவ்வொரு புத்தகத்திலும் எழுத்தாளரின் உயிரோவியம் ஒன்று வருவது புதிய, சிறந்த ஒரு முறை.

**விலை அணு 4.**

12-புத்தகங்களுக்கு 3—0—0

எல்லா இடங்களுக்கும் ஏஜெண்ட்டுகள் **தேவை.**

# காஷ்மீரத்தில் ஜவஹர்

எஸ். ராமகிருஷ்ணன்,

காஷ்மீரப் போராட்டத்தின் தலைவர் ஷேக் அப்துல்லாவுக்கு மூன்று வருஷத் தண்டனை விதிக்கப்பட்டது.

"விடாதே மேல் நடவடிக்கை" என்று தந்தி கொடுத்தார் ஜவஹர் அப்துல்லாவின் வக்கீலுக்கு.

எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வேண்டுமானல் புள்ளி விவரங்களுடன் உணர்ச்சி மிக்க நடையில் எழுதியுள்ள மேற்கண்ட புத்தகத்தைப் படியுங்கள்.

**விலை அணு 12.**

விவரங்களுக்கு

# இலக்கிய மன்றம்

56/57. உஸ்மான் ரோடு,

**தி. நகர் : : சென்னை.**

# தமிழ்த் தொண்டு

பாரதிதாசன்

வயதிருபத் தைந்தினில்நான் காரைக்கால் நகரில்
வண்தமிழால் ஏடெழுதி வெளிப்படுத்தும் நாளில்
வெயில்நிகர்த்த முகமுடையான் இளங்காளை ஒருவன்
மெல்லஎனை வந்தடுத்தான்; சின்னாளின் பின்னர்த்
துயில்களைந்தேன்; உணர்வுற்றேன், தமிழர்க்கு நானும்
தொண்டுசெய எண்ணுகிறேன் என்றுரைத்தான்; 'தம்பி
முயல்கின்றார் நல்லறிஞர் நம்நாட்டை மீட்க
முடிந்தவரை தொண்டாற்றப் போ' என்றேன் சென்றான்.

* * * *

ஒருமுப்ப தாண்டுக்குப் பின்னொருநாள் அவனை
ஒளியிழந்த முகம்சிறிது வெளுத்ததலை ஓயா
திருமுகினற பேச்சோடு கண்டுமனம் நொந்தேன்
ஏதேனும் பணம்? என்றான். பிள்ளைகள் எத்தனைபேர்
இருக்கின்றார் எனக்கேட்டேன். மணமில்லை என்றான்
எங்குள்ளார் பெற்றவர்கள் எனக்கேட்டேன் என்னை
இரக்கமெனும் பெருங்கடலில் தள்ளினான். உற்றார்
எவருமே நினைவில்லை என்பதையும் சொன்னான்.

* * * *

வீடுதமிழ் நாடுதான் ! தமிழரெலாம் கிளைஞர் !
விண்தட்டி மேலெழுந்த மண்படுக்கை யாகும் !
வாடுபசி நேரத்தில் எவரேனும் ஒருவர்
வா,என்றால் சாப்பாடு! காதலெல்லாம் என்றன்
நாடுநலம் பெறும்வண்ணம் நான்சிறிது பேசல்!
நாலுபேர் என்பேச்சுக் கிணங்குவதே இன்பம்!
ஈடுபட்ட நாள்முழுதும் இப்படியே! ஐயா
இன்றுநான் செயத்தக்க தென்னவென்று கேட்டான்.

*    *    *    *

தமிழ்நாட்டின் அதிகாரம் தமிழனிடம் இல்லை
தமிழ்உயர்ந்தால் தமிழ்நாட்டின் நிலைஉயரும் அப்பா
தமிழ்நாட்டில் தமிழின்நிலை எத்துறைநோக் கிடினும்
தலைகுனியத் தக்கதுவாம் எவர்அறியார் இதனை !
நமக்கெல்லாம் நாட்டுரிமை வந்ததென்கின் றார்கள்
"நமைவீழ்த்த நமக்குரிமை" என்பததன் பொருளாம்!
தமிழ்தொண்டுத் தொடங்கென்றேன் ! பணம் எடுத்தேன்! வாங்கத்
தான்மறந்தான்; தமிழ்தாழ்ந்த தேன்எனப் பறந்தான்!

# மாக்ஸிம் கார்க்கி

அ. இளங்கோவன்

உலகை நடத்துவ்து சில மனிதர்களுடைய எண்ணங்கள் தாம். எண்ணத்திற்கு உயிர் உண்டு. எழுத்து மூலம் தான் எண்ணத்திற்கு வேகமும், மினுமினுப்பும் உண்டாகிறது. எழுத்துக்கு உள்ள வேகம் பேச்சுக்கு இருப்பதில்லை. பேச்சை மறந்து விடுவோம்; எழுத்தை மறக்க முடியாது.

'உயிர் இனிது' தான். இதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தக் கருத்தில் உயிர்ப்பு இல்லை; ஆழ்ந்த பொருள் இல்லை. அதே போல்தான் 'காதல் இனிது' என்று சொல்லப்படுவதிலும். ஆனால் 'உயிர் இனிது; அதனினும் இனிது காதல்' என்று சொல்லுவதில் விறுவிறுப்பு இருக்கிறது; கருத்து இருக்கிறது; அறிவுக்கு வேலையும் இருக்கிறது. இதுதான் இலக்கியம். இப்படி எழுதுகிறவர்கள் தாம் இலக்கியத்துக்குத் தேவை. உயிர்த் துடிப்போடு எழுதுகிற இவர்களுடைய இலக்கியம்தான் அமரத்துவம் பெறுகின்றது. இவர்கள் தாம் பொன் ஏர் பூட்டி புது சமுதாயத்தை வளப்படுத்துகிறவர்களாவர். இலக்கியம் இரண்டு வகைப்படும். இலக்கியத்தை தற்காலிகமான இலக்கியம் என்றும், நிரந்தர இலக்கியம் என்றும் இருவகையாகப் பிரித்து இருக்கிறார் ஜான் ரஸ்கின். நிரந்தர இலக்கியம் எழுதுகிறவர்களுடைய எழுத்துக்கள் எசசமில்லாத முத்துக்கள்; இலக்கியத்தின் வைரக் கற்கள். உலகத்துக்கு நிரந்தர இலக்கியம் தந்தவர்களில் மாக்ஸிம் கார்க்கி என்ற ரஷிய நாட்டு அறிஞரும் ஒருவராவர். இவருடைய எழுத்துக்கள் உயிர் உள்ள சித்திரங்கள்; வாழ்க்கை அனுபவத்தின் மொழி பெயர்ப்பு. இதுதான் கலையும் கூட.

"கூடை கூடையாகப் பாட்டு எழுதி அச்சிட வேண்டு மென்று துடி துடிப்பவன் புலவனாக மாட்டான்" என்றார் நம் பாரதியார். இதையே உரை நடை ஆசிரியனுக்கும் சொல்லி விடலாம். மேலை நாட்டு அறிஞர் ஒருவர் தம் வாழ்க்கையில் எட்டே வரிகள் கொண்ட ஒரு கவிதையை இயற்றியுள்ளார். இது நிரந்தர இலக்கியமாகக் கருதப்படுகிறது. இலக்கிய மதிப் பீட்டுக்குப் புத்தகங்களின் பக்கங்கள் முக்கியமானதல்ல. ஆனால் அதிலே ஏற்றப்பட்டிருக்கும் கருத்துக்கள் தாம் முக்கி யம். கருத்தைச் 'செட்'டாக உபயோகப் படுத்துகிறவர்கள் யாரோ அவர்கள் தாம் இலக்கிய மணிகள்; நாம் போற்றி வணங்கும் அறிஞர்கள்.

மாக்ஸிம் கார்க்கி, இந்த வரிசையில் இடம் பெற்றிருப்ப வர். பத்தரை மாற்றுத் தங்கமான அவருடைய எழுத்தோவி யம் ஒன்றை இங்கே நாம் பார்ப்போம். கான்ஸ்டேன்டின் வெடின் என்ற எழுத்தாளனுக்கு கார்க்கி எழுதிய கடிதம் ஒரு இலக்கியக் கடிதமாகும். அதன் முக்கிய பகுதியாவது:—

" கலை நேர்மையானதாக இருந்தால் கொண்டதே கோலம்; கண்டதே காட்சி என்று இருக்காது. சுதந்தர மான கலை மனித வாழ்க்கையின் சுவிசேஷம். மனிதனு டைய, வாழ்க்கையைச் சிருஷ்டிக்கிறவனுடைய துயரத்தை, உணர்ச்சிப் பெருக்கை, நெஞ்சக் குமுறலை, அதே போல் வேடிக்கையையும், அழுகைக் குரலையும் கொண்டிருக்க வேண்டும் அந்தக் கலை. உண்மையான கலை வறட்டுத் தத்துவ ஞானமோ அல்லது போதனையோ செய்யாது. ஆனால் அது 'அன்பு' தான் காட்டும் என்று நான் எழுதிக்கொண்டிருக்கும் நாவலில் வரும் கதா பாத் திரம் ஒன்று சொல்லுகிறது. அதோடு நான், 'வெறுக்க

வும் செய்கிறது' என்று சேர்க்கவும் போகின்றேன். உண்மையின் மீது கருத்துச் செலுத்தி, அதன் மூலமாகப் பெறும் சொல்லடுக்கும் திறமை—எழுத்துக்களுடைய மேஸ்திரியாகும் ஒரு அநுபவம் கடுமையான ஓர் செயலாகும். கலைஞன் வாழ்வில் கண்ட அனுபவத்தைச் சேர்த்துக் கொள்ளுகிற அவனுடைய வாழ்க்கை, வெறும் சடங்காசாரங்களில் நிற்பதில்லை; மூடப் பழக்க வழக்கங்களுக்குப் பணிவதில்லை. அவனுடைய ஆத்மாவை விட்டு விலகுவதும் இல்லை; ஆனால் அது செய்வதுதான் என்ன? வாழ்க்கை அனுபவத்தில் கண்ட இரக்கமற்ற—கல்நெஞ்சம் படைத்த சுயநலக் கொடுமை, கலைஞனுக்கு சிருஷ்டிக்க வேண்டுமென்ற பலமான உறுதியை ஏற்படுத்தி விடுகிறது."

உண்மையான சரித்திரம் சரித்திரக்காரர்களால் எழுதப்படுவதல்ல. ஆனால் அது கலைஞனால் தான் எழுதப்படுகின்றது. உங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை எப்படி எழுதுவது—என்பதேயாகும். இதைக், காலமும் எழுத்து வேலையில் நீங்கள் காட்டும் அன்புமே தீர்மானிக்க வேண்டியதாகும். டால்ஸ்டாயைப்பற்றி நீங்கள் கேட்டு இருக்கிறீர்கள். அவருடைய எளிமையின் நோக்கம், உறுதி கொண்டு விடாமுயற்சியுடன்.........வேலை செய்து வந்ததினால் ஏற்பட்டதுதான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

எழுதுவது என்பது மிகக் கடுமையானது. இந்தச் சுலோகம் நினைப்பூட்டிக் கொள்வதற்கு புத்திசாலித்தனம் நிறைந்ததும், சிறந்ததுமான ஓர் சுலோகம் தான். இதை எப்பொழுதும் மறந்து விடாமல் வைத்திருந்தால், எல்

லாமே சுமுகமாய்ப் போய் முடியும். எழுதினவன் பூர ணத்துவம் பெற்ற நிலைமையை அடைவதற்கு, இந்த சுலோகத்தைக் கொண்ட ஒரே உண்மையான பாதைதான் இருக்கிறது ”

ஆயிரம் வார்த்தைகளில் சொல்ல வேண்டிய ஒரு கருத்தை ஒரு சில வார்த்தைகளில் எவ்வளவு லாவகமாய் கார்க்கி பின்னி இருக்கிறார் என்பதை வாசக நண்பர்கள் சிந்திப்பார்க ளாக.

‘காற்றடிக்குது கடல் குமுறுது கண்ணை விழிப்பாய் நாய கனே’ என்பதுதான் கார்க்கி மனித சமூகத்துக்குச் செய் திருக்கும் உபதேசம். இதனை ஒரு தகப்பனைப் போல் அன் பாகவும் சொல்லி இருக்கின்றார். குழந்தை தப்புச் செய்வதை —அடம் பிடிப்பதை திருத்தும் தந்தைக்குரிய கடமையில் அதட்டியும் சொல்லியிருக்கிறார். மனிதர்களிலே ஒரு சிறு கூட் டம் இடம்பக் கூத்தாடுவதை வெறுத்து, மேகங்கள் உறுமு வதைப்போல் ஆத்திரங் கொள்ளும் வழியில், சிந்திப்பவனை ‘புரட்சிப் பாதையி’ல் அடி எடுத்து வைக்கும்படி உரத்துக் கூறியிருக்கிறார்.

இவர் பிறவி எழுத்தாளர்; இலக்கிய கர்த்தா. உயர்தரக் கல்வியில்லாத ‘பாமரனாய்’ வாழ்க்கையின் கடுமையான சவுக்கடி களைத் தாங்கிக்கொண்டு எழுத்துச் சேவை—இலக்கியப் பணி புரிந்தவர். வார்த்தைகளாயுள்ள வர்ணக் கற்களை வகை வகை யாய் மேலடுக்கிச் சேர்த்து ‘ஜோடி’ப்புச் செய்த மறுமலர்ச்சி வாதியல்ல கார்க்கி. பிச்சைக்காரனை அப்படியே சிலை செதுக்கு பவனைப்போல், சமூக ஊழல்களை அதன் கோரஸ்வரூபத்தை அப்பட்டமாகச் சொன்னவர்.

சமூகத்தால் வெறுக்கப்பட்டு, நாடோடிகளாகத் திரியும் அனுதைகளேத் தாம் இவர் முக்கிய கதா பாத்திரங்களாக, தம் கதைகளுக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறர். வாழ்க்கையை ஒட்டி ஏற்படும் சகல கொடுமைகளுக்கும் உள்ளாகி, துன்ப மடைந்து தவிக்கும் ஒருவனிடமிருந்து எழும்பும் குமுறல் இவர் மூலம் எழும்புகிறது. இதுதான் இவரது எழுத்தின் ஆரம்பமாய் இருக்கும். உலகத்திற்கு முன்பாக ஒப்பிணைசொல்ல முடியாத ஆழ்ந்த அனுபவத்தோடும், உலகமே எதிர்த்தாலும் அசையாத மனமும் உடையவராய் கார்க்கி காட்சி தருகிறர்.

எதிர்கால மனிதனை—புரட்சி மனிதனை—சமூக ஊழல் களை—ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு, நெஞ்சு கொதிக்கும் பயங் கர வாதியை, தாம் கண்ட பொன்னுலக அமைப்புக்கு கொடி தூக்கிச் செல்லும் முன்னணிவாதியை, முன் மாதிரியாக வைத் துக் கனவு கண்டவர். காலில் செருப்பு இல்லாமல், பாயும் படுக்கையும், வீடும் வெளிப்புறமும் இல்லாமல் தவிக்கும் ஒரு சாதாரண ஏழை மனிதனுடைய வாழ்க்கைதான் கார்க்கியின் சுயசரிதமும்கூட. அவனுடைய கனவுகள், எண்ணங்கள், விருப்பு, வெறுப்புக்கள், மகிழ்ச்சி, துன்பம் ஆகிய இவை தாம் கார்க்கினுடையதுமாகும்.

புரட்சிப் போர்க்கொடி தூக்கிய இவர் இளம் எழுத்தாளர் களை உருவாக்கிய விதம் அற்புதமானது. நமக்கு ஒரு படிப் பிணையாய் இருப்பதுங்கூட. இவருடைய பார்வைக்கு எளிய எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகள் ஏராளமாக வந்து குவியும். அவற்றை எல்லாம் கவனமாகப் படித்து, விளக்க மான திருத்தங்களேச் செய்திருக்கிறர். ஜியார்ஜி அஸ்டினே வுக்கு 1908-ம் ஆண்டு எழுதிய கடிதமொன்றில் கார்க்கி எழுதியிருப்பதாவது:

"...........உங்கள் கையெழுத்துப் பிரதியை திரும்ப அனுப்பியுள்ளேன். இன்னும் என் மேஜை மேல் 1936 கையெழுத்துப் பிரதிகள் இருக்கின்றன."

இது ஒரு உதாரணம். இவரைப்பற்றி ரோமன் ரோலந்து கூறிய மணி வாசகத்தில், "வேறு எந்தப் பெரிய எழுத்தாளரும் சாதிக்க முடியாத பெரிய அளவுக்கு...........ரஷியாவினுடைய இலக்கியம், கலை, விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு பிரதம வழிகாட்டியாக இருந்திருக்கிறார். இவர் அவர்களுடைய தலைவராய், அவர்களை உருவகப்படுத்தும் நல்லாசிரியனாய், அவர்களுடைய பாதுகாவலராய் இருந்து வந்திருக்கிறார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

எண்ணற்ற எழுத்தாளர்கள் கார்க்கியின் குணதோஷம் (Criticism) கடுமையானதாய் இருக்கும் என்று தெரிந்து இருந்தாலும்கூட, இவர் வசித்துவந்த காட்ரி என்ற இடத்திற்கு, தங்கள் கையெழுத்துப் பிரதிகளையும் எடுத்துக்கொண்டு யாத்திரை செய்திருக்கிறார்கள். இப்படிச் சென்றவர்கள் கார்க்கியின் உற்சாகமான வரவேற்பையும், உதவியையும் ஒரு போதும் பெறத் தவறியதில்லை.

கார்க்கியின் வீடு விருந்தோம்பலுக்கு அணிகலமானது. எழுத்தாளர்களைச் சாப்பிடச் செய்து மகிழ்விப்பதில் கார்க்கிக்கு விருப்பம் அதிகம். அதிலே அவர் தனி மகிழ்ச்சியும் அடைவார். ஒரு சமயம் இவருடைய வீட்டை, சிற்றுண்டிச் சாலை என்று தவறாய்க் கருதிக்கொண்டு ஒரு ஐரோப்பியர் பழங்கள், முட்டைகள், ஜீஸ் முதலியவற்றைச் சாப்பிட்டுவிட்டு, கடைசியில் பணம் கொடுக்கும்போதுதான், அது கார்க்கியின் வீடு என்று அவருக்குத் தெரிய வந்தது. மன்னிப்புக் கேட்டுக்

கொண்டு வீடு திரும்பிய அவர் கார்க்கிக்குப் பூச்செண்டு மூலம் மன்னிப்பு, மன்னிப்பு என்று நிறைய எழுதப்பட்டிருந்த ஒரு கடிதத்தையும் அனுப்பி வைத்தாராம்!

•

சுயமாகப் படித்து முன்னுக்கு வந்த தொழிலாளிகள், விவசாயிகள் வர்க்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு 'பேனு'வைத் தங்கள் ஆயுதமாக எடுத்துக் கொள்ளும்படி விளக்கி உதவி செய்தார் கார்க்கி. எழுத்தாளனுடைய எழுத்தில் திறமையில்லை என்று கண்டால் வழக்கம்போல் சொல்லுகிற பாணியில், மேலும் எழுத்துத் துறையில் முயற்சிப்பதைவிட, வேறு தொழிலுக்குப் போவது நல்லது என்று கூறுவார். உதாரணமாக ஒரு ரஷிய மாணவர் கல்லூரியில் இருக்கும்போது சில கதைகளை எழுதினுர். பிறகு அவர் எழுதும் துறையை விட்டு விட்டு உபாத்தியாயராகப் போய் விட்டார். இதனை அறிந்த கார்க்கி, உபாத்தியாயர் வேலையை விட்டுவிட்டு, எழுத்து வேலையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பிறகு அந்த ஆசிரியர் கதைகள், நாடகங்கள் எழுதுவதில் நல்ல புகழைச் சம்பாதித்தார். இவர் பெயர் டிரினேவிச்.

யாரிடத்தில் திறமை இருக்கிறது என்று கார்க்கி கண்டாரோ அவர்களை, அறிவை நிறையப் பெறும் பொருட்டு ஏராளமாய்ப் படிக்கும்படியும் தூண்டி வந்திருக்கிறுர். கதை அமைப்பில் குறைவு இருந்து, கலைக்குரிய உண்மை உள்ளத்தோடு மட்டும் எழுதியிருந்தால் அவர்கள் தம் கதைகளை கார்க்கி தம் சொந்த அனுபவங்களைக் கொடுத்து மேலும் உயர்த்தியிருக்கிறுர். அவர் பார்வையிட்டுச் சரிப்படுத்திய கையெழுத்துப் பிரதிகளில் ஆச்சரியப்படும்படியான அளவுக்கு அவர் செய்திருக்கும் எண்ணற்ற திருத்தங்களும், சில சமயங்களில்

முழுப்பக்கங்களேயுமே அவர் மாற்றி எழுதியிருப்பதும் போதிய சாட்சியாகும்.

ரஷியப் புரட்சிக்கு முன்பு, ஏராளமான எழுத்தாளர்களுக்கு அவர் ஒரு ஆசாரியராகவும், அறிவுக்கருவூலமாகவும் இருந்து வந்திருக்கிறார். அவரைப்பற்றிச் சொல்லுகிறவர்கள் அவர் ஒரு மனிதராக இருக்கவில்லை. ஆனால் ஒரு அரசாங்க இலாகாவைப்போல் இருந்தார் என்று கருத்துரை கொடுத்துள்ளனர். பதிப்பிட வேண்டிய மிகச் சிக்கலான விஷயங்கள் இவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து சீர் செய்யப்படும். ரஷிய மொழியில் முக்கியமான வெளியீடுகளைக் கொண்டு வருவதற்கு கார்க்கி முதல் தொடக்கக் கர்த்தாவாக இருந்தவர்.

ரஷிய மொழியிலே பெருந்தன்மை நிறையப்பெற்ற எழுத்தோவியங்கள் பதிப்பிக்கப்பெற வேண்டுமென்று சொல்லி வந்தவர் கார்க்கி. அதே மாதிரி எழுத்தாளர்களிடமிருந்தும் விரும்பினர்.

எழுத்தாளர்களுக்கு இவர் செய்த பின்கண்ட உபதேசம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவைகளாகும்.

"வேறு தொழில்களில், கவனம் செலுத்துகிறவர்களை விட, நாம் (எழுத்தாளர்கள்) அதிகமாகப் படிக்கவேண்டியதிருக்கிறது. ஒரு புதிய உயிரோவியத்தைச் சமர்ப்பிக்கிறவர்களாகிய நாம் இதன் மூலம் வாழ்க்கையின் உபாத்தியாயர்களாக மாறி விடுகிறோம்."

வருத்தப்படுகிறவனுக்கு நம்பிக்கை, உணர்ச்சி யிழந்து உள்ளம் குன்றிப்போய் இருப்பவனுக்குத் தைரியம், அறியா

மைக்கு வெளிச்சம் கொண்டு வந்ததுதான் கார்க்கி நமக்குச் செய்திருக்கும் தொண்டு.

அறிவற்றவர்கள்—பழமை விரும்பிகள் தங்கள் சோம்பேறித்தனத்துக்கு முத்தாய்ப்பு வைத்து, அதன் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வெறிகொண்ட யானையைப்போல் நடந்துகொள்ளும் மனிதப் பிரகிருதிகளைச் சரியான சாட்டியடி கொடுத்து, பிறகு அங்குசம் கொண்டு தாக்குவதற்கு புதுப் புது ஆயுதங்களைப் 'புரட்சி' எழுத்தாளர்களுக்கு வழங்கியிருக்கிறார்.

திக்கற்றவர்களின் கவிஞனாகவும், பாட்டாளியாகவும் இருந்த கார்க்கி கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டு பிச்சைக்குக் 'கௌரவ'மாய் அலைந்து திரியும் மனிதனாகவோ அன்றி, மக்களின் மனதைக் கவரும் வகையில் விலையுள்ள மாணிக்கக் கற்களை பரப்பி வைத்திருக்கும் வியாபாரியாகவோ உலகத்திற்கு வரவில்லை. ஆனால் உலகிற்கு வழிகாட்டியாகவும், ரத்தமற்றுச் சோம்பிக் கிடப்போருக்கு புது ரத்தம் தருவோனாகவும் வந்திருக்கிறார்.

கார்க்கியின் உண்மைப் பெயர் அலெக்ஸி மாக்ஸிமோவிச் பியாஸ்கோவ் என்பது. 1868-ம் ஆண்டு மார்ச் 20-ந் தேதி நிஜனிநோவோகோர்டு என்ற இடத்தில் பிறந்தார். சின்னஞ் சிறு குழந்தையாக இருக்கும்போது, இவர் தாய் தந்தையரை இழந்து திக்கற்றுப்போனவர். கடுமையும், கொடுமையும் நிறைந்த வாழ்க்கைப் பள்ளிக்கூடத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்!

கார்க்கி எழுத்தாளர் மட்டுமல்ல; சிறந்த சக்கிலியாகவும், உயர்ந்த சமையல்காரராகவும், ஒரு தோட்டக் காரராகவும்

இருந்து வாழ்க்கையின் சவுக்கடிகளைத் தாங்கியவர். கார்க்கி என்பது அவரது புனைப்பெயர். இதற்கு 'வெறுப்பு' என்பது அர்த்தம். இளமையில் ஏற்பட்ட கொடும் அனுபவங்களை அறிந்து, இப்பெயரை வைத்துக்கொண்டார். இவர் சமுதாயப் புரட்சிக்காரர்; கண்டனம் என்ற சுடு சரங்களை ஏவிவிடுவதைத் தவிர, ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று மனம் புழுங்கியவர். வாழ்க்கையை இருக்கிறபடியே முத்தாய்ப்பு வைத்து எழுதிய மேதை.

கார்க்கி எழுதிய 'அம்மா' என்ற நாவல் உலகத்தின் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. தெலுங்கு மொழியில் கூட மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் தமிழில்...........? இவர் வேறு பல நாவல்களும், சிறு கதைத் தொகுதிகளையும் எழுதியிருக்கிறார்.

இவருக்கு இணையாக கடந்த காலத்திலும் சரி, தற்காலத்திலும் சரி, இலக்கிய மணிகள் ஒரு சிலரேதான் உண்டு. அவருடைய இலக்கியங்கள் விலை மதிப்புள்ள கலைச் செல்வங்கள் மட்டுமல்ல; அதேபோல் விலைஏறின சமுதாய அரசியல் சரித்திரம்.

# வீடு வேண்டுமா?

அன்பு கணபதி

'கஞ்சி வரதப்பா' என்ற ஓசை கேட்ட உடனே 'எங்கே' என்று கேட்டுப் புறப்பட்ட பக்தனைப்போல 'வீடு வேண்டுமா' என்ற உடனேயே தயவுசெய்து புறப்பட்டு விடாதீர்கள் என்னுடைய வீட்டு விலாசத்தை விசாரித்துக்கொண்டு. போர் வந்தாலும் வந்தது, குடியிருக்க நல்ல வீடு கிடைக்காமல் எவ்வளவு பேர் தொல்லைப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஏன், அவர்களில் நானும் ஒருவன் அல்லவா? ஆகவே தான் எங்கே புறப்பட்டு விடுகிறீர்களோ என்னைத் தேடிக்கொண்டு என்ற பயத்தினால் முன்னெச்சரிக்கையாக என்னுடைய விலாசத்தை இங்கு நான் குறிக்கவில்லை. யாரையாவது கேட்டுத் தெரிந்துகொண்டு ஒரு வேளை நீங்கள் என்னைக் கண்டு பிடித்துக் கேட்டாலும், அதனால் பயன் ஒன்றும் இல்லை என்பதை இப்போதே சொல்லி வைக்கின்றேன். ஏனென்றால் நான் சொல்ல வந்த வீடு, நீங்கள் பல நாட்களாகத் தவங்கிடந்து ஏங்கி எதிர் பார்த்து நிற்கும் இந்த உலகத்து வீடல்ல. நம் வாழ்க்கை முடிந்த பிறகு, நாம் போவதாகச் சொல்லப்படும் அந்த உலகத்தில் உள்ள வீடு உண்டே—அதுதான் மோட்சம்—அது வேண்டுமா? என்றுதான் கேட்டேன். என்ன அப்படி விழிக்கிறீர்களே? அந்த வீடு உங்களுக்கு வேண்டாமா? சரி, சரி இந்த உலகத்துப் பற்று உங்களைவிட்டு இன்னும் போகவில்லை போலிருக்கிறது! மாயையில் கிடந்து உழலவேண்டும் என்பது உங்கள் தலைவிதியானால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

அது கிடக்கட்டும், பழங்காலத் தமிழன் வீட்டைப்பற்றி என்ன நினைத்தான்? அவன் அந்த வீடோ அல்லது இந்த

வீடோ, எதைப்பற்றியும் கவலைப்பட்டானில்லை. ஏன்? இந்த வீட்டை அவன் நல்ல வகையில் பெற்றிருந்தான். இந்த வீட்டு வாழ்க்கையை—இல்லறத்தை ஒழுங்கான முறையில் வளம் பெற நடத்தி வந்தான். எனவே, அவனுக்கு அந்த வீட்டை—மோட்சத்தைப்பற்றி எண்ண இடமில்லாமலே இருந்தது. நான் சொல்வது மிகப் பழங்காலத்துத் தமிழனைப்பற்றி என்பது நினைவிலிருக்க வேண்டும். அன்பின் வழிவந்த காதல் ஒழுக்கத்தை—ஐந்திணை வாழ்க்கையை—இல்லற இன்பத்தைச் சிறந்த முறையில் கடைப்பிடித்து வந்தான். இல்லற வாழ்க்கையை—இந்த வீட்டு இன்பத்தை வளம்படுத்த பொருளைத் தேடினான். அப்பொருளையும் நேரிய வழியில்—அற மார்க்கத்தில் ஈட்டினான்; 'பிளாக் மார்க்கட்' செய்து பொருளைப் பெருக்கினானில்லை. அப்பொருளைக் கொண்டு, தானும் இன்பம் பெற்றான்; தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் இன்பம் அளித்தான். இன்பத்திற்கே முதலிடம் தந்தான். இன்பமே அவன் வாழ்க்கையின் லட்சியம் எல்லாம். இந்த உலகத்து இன்பத்தைத் துறந்துவிட்டு, அந்த வீட்டு இன்பத்திற்கு ஏங்கித் தவங் கிடந்தானில்லை.

" இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை "

என்று தமிழனின் வாழ்க்கைப் பண்பினை விளக்குகின்றான் தொல்காப்பியன். காலத்தினால் மிகப்பழமையான நூல், தமிழனின் வாழ்க்கைப் பண்பை விளக்கும் தனிநூல் தொல்காப்பியம் என்பது நினைவிலிருக்க வேண்டும். இதில் என்ன கூறுகின்றான் தொல்காப்பியன்? தமிழனின் ஐந்திணை வாழ்க்கை—இல்லறநெறி, இன்பம் நிறைந்தது என்பதை அறிவிக்க இன்பத்திற்கு முதல் இடமளிக்கின்றான். அந்த இன்பம், பொரு

ளால்—செல்வத்தால் வரும் என்பதைக் குறிக்க, பொருளை அடுத்தாற்போல இரண்டாவதாக வைக்கின்றான். அந்தப் பொருளையும் ஒழுங்கான வழியில் தேடவேண்டும என்பதை அறிவுறுத்த, அறத்தை மூன்றாவதாக அடுத்து வைக்கின்றான். ஆகவே, இன்பம், பொருள், அறம் என்ற இந்த மூன்றையும், தமிழன் தனது, இந்த உலக வீட்டுவாழ்க்கைக்கு மிகச் சிறந் தவையான உறுதிப்பொருள்களாகக் கொண்டான். எனவே, அந்த வீட்டைப்பற்றி அவன் கவலைப்பட மார்க்கம் ஏற்பட வில்லை.

அந்த வீடு—மோட்சம், இடைக்காலத்தில் தமிழகத்தில் இறக்குமதியான வெளி நாட்டுச் சரக்கு. இச் சரக்கைக் கொண்டுவந்தவர்கள், உறுதிப் பொருள்கள்—அதாவது புரு ஷார்த்தங்கள் மூன்றல்ல, நான்கு என்றனர். முன்னர்க் கூறிய அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுடனே வீட்டையும் சேர்த்து நான்கு என்றனர். அதுமட்டுமல்ல. முதல் மூன்று பொருள்களைவிட இந்த நான்காவதாகிய வீடே மிகச் சிறந்தது என்றனர். வியாபாரிகள் தங்கள் சரக்கு, தாழ்ந்தது என்று கூறுவார்கள்? நம்பினான் தமிழன். நம்பியது மட்டுமல்ல, தனக்கே சொந்தமான அறம் பொருள் இன்பத்தைக் கைவிட் டான். புதிய வீட்டை, கெட்டியாகப் பற்றினான். அன்று முதல், இந்த வீட்டு வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்பட்டா னில்லை. அந்த வீட்டையே அவாவி நின்றான். இந்த வீட்டை அடியோடு மறந்து, எல்லாம் அந்த வீட்டிற்காகவே செய்தான். வந்த வியாபாரிகளுக்கு எந்த வீடு வேண்டுமென்பது நன்கு தெரியும். அந்த வீட்டைக் காட்டி, தமிழனின் இந்த வீட் டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். வளம்பட்ட இந்த வீட்டை மறந்து, மறந்தது மட்டுமல்ல துறந்து, என்று அந்த வீட்டை எண்ணத் தலைப்பட்டானோ அன்றே தமிழன் வீழ்ந் தான்; அவன் வாழ்க்கை குலைந்தது; அவன் நாடு நலிந்தது.

'ஆசைகளை விடு' என்ற அயல்வர் பேச்சை ஏற்று ஏமாந் தான். முக்கியமாக 'மூவாசை' கூடாது; அவை முக்திக்குத் தடை, என்ற மொழிகளை நம்பினான். மூவாசைகள் எவை. மண், பெண், பொன் என்ற மூன்றே மூவாசைகள் எனப் படும். 'மண்ணை நம்பாதே, பெண்ணை வெறு, பொன்னை விடு'—இந்த 'மணிவாசகங்க'ளை நம்பினான்—நம்பி ஏற்றான் இடைக்காலத்து ஏமாந்த தமிழன். மண்ணை நம்பக்கூடாதாம்—பெண்ணை வெறுக்க வேண்டுமாம்—பொன்னைத் துறக்க வேண் டுமாம்—இதனை இன்று நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? மண்ணில் பிறந்தோம்; மண்ணில் வளர்ந்தோம்; மண்ணில் வாழ்கின்றோம். மண்ணே நம்மைத் தாங்கி வளர்த்து வருகின் றது. நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைத்துத் தருவது மண்தானே! எனவே மண்ணை வெறுத்துச் சோம்பி இருப்பது—விண்ணை வேண்டி நிற்பது மாண்பாகுமா? நம்மை வளர்க்கும் பூமித்தாயைப் புறக்கணிக்கலாமா? தாயைப் போற் றாதவனுக்குத் தனயன் என்ற பெயர்? வாய்மைப் புலவன் வள்ளுவன் கூறுவதைப் பாருங்கள்.

"இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்"

நம்மிடத்தில் ஒன்றுமில்லையே என்று சோம்பி இருப்பவரைக் கண்டால், வலிமைபெற்ற நான் இருக்கும்போது என்னை வளப்படுத்துவதன் மூலம் தன் வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ளத் தெரியாது, இப்படியும் ஒரு பிள்ளை இருக்குமா? என்று பூமித்தாய் கெக்கலி கொட்டிச் சிரிப்பாளாம். வள்ளுவ னது வாய்மையை நம்புபவர்கள் மண்ணை வெறுக்கலாமா?

அடுத்து, பெண்ணைப் பேய் என்று எண்ணினான் இடைக் காலத் தமிழன். அவன் மீது தப்பில்லை. அங்ஙனம் எண்ணு

மாறு செய்யப்பட்ட அவன் நிலைமைக்கு இரங்குகிறேன். பெண்ணைப் பேய் என்று கூறலாமா? ஆணைப் பெற்று வளர்த்தவள் பெண்; அவனுக்கு இன்பம் தருபவள் பெண். தாயாக, சகோதரியாக, மனைவியாக இருந்து, வாழ்க்கையில் அவனை ஊக்கி உயர்த்துபவள் பெண்ணே அன்றோ! வாழ்விலும் தாழ்விலும் உடனிருந்து, இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்பவள் அன்புப் பெண்ணே அல்லவா? ஏன்? உலகில் சரி பாதி பெண் தானே! இத்தகைய பெண்ணை வெறுக்கலாமா? இப்பெண்—இந்த வீட்டின் விளக்கு, முக்திக்கு—அந்த வீட்டுக்கு முட்டுக்கட்டையாவாளா?

மூன்றாவது பொன்; அதாவது செல்வம். செல்வம் இல்லாது-செல்வத்தைத் தேடாது ஒருவன் இந்த உலகத்தில் வாழ முடியுமா? செல்வத்தில் ஆசை இல்லாதவனைத்தான் இவ்வுலகில் காண முடியுமா? நல்லாளாகிய இல்லாள்கூட இல்லானை வெறுப்பாளே! உலகத்தையே ஆள்வது செல்வந்தானே. மற்ற இன்பத்தையும் அறத்தையும் வளர்ப்பது செல்வம் அன்றோ! அது கருதித்தானே, 'இன்பமும் பொருளும் அறனும்' என்று பொருளை —செல்வத்தை, இடையில் நடுநாயகமாக வைத்துக் கூறினன் தொல்காப்பியன். இப்பொருளை—பொன்னைப் புறக்கணிக்கலாமா? போற்றி ஈட்ட அன்றோ வேண்டும்!

முடிவாக இந்த மண் பெண் பொன் என்ற மூன்றும் பழந் தமிழனால் போற்றப்பட்டன என்பதை, இக்காலத் தமிழன் நன்றாக மனங்கொள்ள வேண்டும். அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் மண் பொன் பெண் என்று வேறு பெயரில் கூறப்படுகின்றன. மண்ணாவது அறம்; பொன்னே பொருள்; பெண்ணே இன்பம். இம் மூன்றனையும் போற்றி வளர்க்கவேண்டுவது இக்காலத் தமிழனின் கடமையாகும்.

ஆகவே, பழந் தமிழன் கண்டு பண்புடன் வளர்த்த இன்ப அன்பு இல்லற வாழ்க்கைப் பண்பு ஆகும். உலகம் ஒப்பும் திருவள்ளுவனும் இம் மூன்றையே தன் திருக்குறளில் கூறி வைத்துச் சென்றான். அவன் பாடியது அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், என்ற மூன்றே. நான்காவது பாலை நவின்றானில்லை. அப்படியே அந்த வீடு என்று ஒன்று இருப்பதாக, வாதத்திற்காக ஒப்புக்கொள்கிறேன். அதற்காக, கையில் கிடைத்த அழகான வீட்டை இடித்துப் போட்டுவிட்டு, கிடைப்பதாகச் சொல்லப்படும் ஒன்றுக்காகக் கிடந்து உழலுவதா? சிறிய இன்பம்—இந்த வீடு நுகர இயலாதவன் 'பேரின்பம்'—அந்த வீடு அடைவது எப்படி? 'நாளை வரும் பலாக்கனியைவிட இன்றிருக்கும் களாக் கனியே மேல்' என்பது பொருள் நிறைந்த முதுமொழி அன்றோ?

ஆகவே, இக்கால இளந்தமிழனை நான் வேண்டிக்கொள்ளுகின்றேன். அன்பனே! மண்ணையும் பொன்னையும் பெண்ணையும் விரும்பு; வெறுக்காதே. ஆனால் உன் விருப்பம் நேரிய வழியில் இருக்கட்டும்; பேராசை கொள்ளாதே! வரம்பு கடவாதே! நீயும் பிறரும் இன்பத்தை அடைய, பொருளை அறவழியில் தேடு. அதாவது அறவழியில் பொருளைத்தேடி நீயும் நலமுறு; 'உன்னைச் சேர்ந்தவர்களையும் நலம் பெறச்செய்! உலகத்தின்மீது கொண்டுள்ள வெறுப்பு எண்ணத்தை—துறவு உள்ளத்தை அறவே விடு!

இப்போது கேட்கின்றேன், வீடு வேண்டுமா உங்களுக்கு? ஆம், என்றால் எந்த வீடு?

# அன்னைக்கு

மு. வரதராசனார்

அன்புள்ள அம்மா,

விடுமுறையில் இரண்டு வாரம் வீட்டில் இருந்துவிட்டு வரலாம் என்று மகிழ்ச்சியோடு புறப்பட்டு வந்தேன். ஆனால் நீயும் அப்பாவும் எனக்கு இல்லாத கவலையை எல்லாம் ஏற்படுத்தி ஆயிரம் உபதேசம் செய்து திரும்பச் செய்திருக்கின்றீர்கள். இப்படி உண்மையை ஒளிக்காமல் எழுதியதற்காக என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் மேல் உள்ள அன்பாலும் நம்பிக்கையாலும் இவ்வாறு எழுதுகிறேன்; இல்லையானால் வெறுங் கதையை எழுதி உள்ளத்தை மறைத்து வைக்க என்னால் முடியாதா? அதனால் எனக்குப் பயனில்லை; உங்களுக்கும் பயனில்லை; தபால் நிலையத்திற்கு ஒன்றரையணா கிடைத்திருக்குமே, அதுதான் பயனாக இருந்திருக்கும்.

நான் ஊரில் இருந்தபோது வெறும் பள்ளிக்கூடத்துப் பையனாக இருந்தேன். அரசியல், சமூகம், சமயம் இவற்றைப் பற்றி எண்ணவே தெரியாத நிலையில் இருந்தேன். ஆனால் இங்கே வந்த பிறகு அப்படி இருக்க முடியவில்லை. "போன வேலையை மறந்து விடாதே; கடமையை மறந்து கவலையற்றுத் திரியாதே; உன்னைச் சென்னைக்கு அனுப்பியது எதற்காக? கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று வருவதற்காக, அதை மறக்காதே" என்று அப்பா அவ்வளவு வற்புறுத்திச் சொல்லி அனுப்பினார்.

அவர் ஏன் இவ்வாறு வற்புறுத்திச் சொன்னார் என்பதை நீ சொன்னபோது தான் தெரிந்து கொண்டேன். சென்னையில் நான் தங்கிப் பழகியது மூன்று மாத காலமே. அதற்குள்

நான் அரசியலில் மிகுதியாகக் கலந்து கொண்டதாக அவர் தெரிந்து கொண்டிருக்கிறார் என்றும், என் பேச்சில் அடிக்கடி அரசியல் வந்தது என்றும் நீ எடுத்துச் சொன்னது எனக்கு நல்லதே. கல்லூரியிலும் ஆசிரியர்கள் பலரும் அரசியலில் கலந்துவிட வேண்டாம் என்றுதான் அறிவுரை புகட்டுகின்றார்கள். ஆனால், கல்லூரிச் சங்கங்களில் வந்து பேசும் அறிஞர்கள் மட்டும் அவ்வாறு சொல்வதே இல்லை. அந்த அறிஞர்கள் பேசுவதெல்லாம் அரசியல் தவிர வேறு ஒன்றும் இல்லை. "மாணவர்களே எதிர் கால இந்தியாவை அமைக்கப் போகின்றவர்கள்; ஆளப் போகின்றவர்கள்; எதிர்காலமே உங்கள் கையில்தான் இருக்கின்றது" என்று சிலர் பேசிவிட்டுப் போகின்றார்கள். மற்றும் சிலர், "நீங்கள் மாணவர்கள் என்று இந்தக் கல்லூரிகளுக்கு வந்திருப்பது, வெறும் புத்தகப் பூச்சிகளாய் இருந்து விட்டுப் போவதற்காக அல்ல; பயனற்ற பட்டங்களைப் பெற்றுவிட்டுப் அடிமைகளாய் அல்லல்படுவதற்கு அல்ல; அறிவும் உணர்வும் பெற்று உரிமையோடு வாழ்க்கையை நடத்தக் கற்பதற்காகவே" என்று பேசி எங்களுக்கு அரசியல் உணர்வை ஊட்டிவிட்டுப் போகின்றார்கள்.

இவ்வாறு நான் எழுதுவதால், அரசியலை விடப்போவதில்லை என்று பிடிவாதம் செய்வதாக எண்ண வேண்டாம். நான் ஓயாமல் கல்லூரிப் பாட நூல்களையே படித்து வருகின்றேன். நண்பர்களோடு அளவளாவும் நேரத்தையும் ஊர் சுற்றும் நேரத்தையும் குறைத்து வருகின்றேன். அப்பா எதிர்பார்த்தபடி முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவதை மறந்து விடமாட்டேன். நல்ல வகையில் தேர்ச்சி பெற்றே வருவேன்.

ஆனால், ஒன்றைச் சொல்லி விடுகிறேன். நாள்தோறும் காலையில் செய்தித் தாள் வாங்கிப் படிக்கும் வழக்கத்தை விட

முடியவில்லை. அதை விட்டுவிடும்படியாக நீயும் சொல்லவில்லை. அப்பாவும் சொல்லவில்லை. அதற்கு மாறாக, படிக்கும்படியாகச் சொல்லி வழி காட்டியவர் அவரே அல்லவா? "பத்திரிகை படிக்கா விட்டால் உலகம் தெரியாத முட்டாள் ஆகிவிடுவாய்" என்று சென்ற ஆண்டில் அவர் எனக்குச் சொன்னதை நான் மறக்கவில்லை. ஆனால், அவர் நம் ஊரிலிருந்து கொண்டு அமைதியாகச் செய்தித் தாளைப் படித்து விட்டுப் பேசாமல் இருக்கிறார். சென்னையில் அப்படி அதைப் படித்து விட்டு அமைதி அடைய முடியாது. என்னால் முடியாது. அவர் நிலைமை எப்படியோ? அவருக்குச் செய்தித் தாள் படிப்பது ஒரு சடங்காக இருக்கலாம். எனக்கு வாழ்க்கை ஆராய்ச்சியாக இருக்கின்றதே! என்ன செய்வேன்?

ஆகையால், நான் அரசியல் அறிவு பெறாமல் இருக்க வேண்டுமானால், முதல் கடமையாகச் செய்தித் தாள் படிக்காமல் இருக்க வேண்டும். இது முடியுமா?

இரண்டாவதாக, உணர்ச்சியற்ற கல்மனம் வேண்டும். அது இயலுமா? உன் வயிற்றில் பிறந்து உன் உணர்வால் வளர்ந்த எனக்கு அது கிட்டுமா?

மூன்றாவதாக, என்னை நீங்கள் சென்னைக்கு அனுப்பியிருக்கக் கூடாது. சென்னை ஒரு பெரிய நகரம் அல்லவா? வெவ்வேறு மொழி பேசும் மக்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்து இங்குத் தொழில் செய்து (அசையாமல் இருந்து வட்டி வாங்குவது முதலான பல தொழில்செய்து) பிழைக்கின்றார்கள் அல்லவா? அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாகவும் அன்பாகவும் கலந்து பழகி வாழ்வதைக் காணும்போது, நாமும் அப்படி வாழ வேண்டும், பழக வேண்

டும் என்றெல்லாம் நல்ல எண்ணங்கள் எழுகின்றன. இந்த எண்ணங்களை எப்படித் தடுக்க முடியும்?

நல்ல எண்ணங்கள் என்று குறிப்பிட்டேன். அம்மா! நீ ஒப்புக் கொள்வாயோ, இல்லையோ, தெரியவில்லை. இந்த எண்ணங்களில் தீமை ஒன்றும் இல்லை என்று நான் நம்புகின்றேன். என்னுடன் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் ஐந்துபேர் இதை ஒப்புக் கொள்ளாமல் மறுத்தார்கள்; அது மட்டும் அல்ல; என்மேல் வெறுப்பும் காட்டி வருகின்றார்கள்; உள்ளத்தில் பகையும் வளர்க்கின்றார்கள்.

இந்த விடுதியில் மலையாளத்து மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள்; ஆந்திர நாட்டு மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள். அவர்கள் அன்பாகப் பழகுகின்றார்கள்; ஒற்றுமையாக இருக்கின்றார்கள். இப்படி நாமும் இருக்க வேண்டும் என்று என்னுடன் உள்ள தமிழ் நாட்டு மாணவர்களுக்குச் சொன்னேன். இதுதான் குற்றமாக முடிந்தது. இதனால் மறுத்தார்கள்; வெறுத்தார்கள்; பகைக்கின்றார்கள்.

"வெளி நாட்டு மாணவர்கள் இங்கே வந்து ஒற்றுமையாக இருந்து முன்னேறுகின்றார்கள்; இந் நாட்டைத் தாய் நாடாகக் கொண்டுள்ள நாம் முன்னேற வேண்டாமா?" என்று கேட்டேன். இது பெரிய குற்றமாம்! மலையாளத்தாரையும் ஆந்திரரையும் வெளி நாட்டார் என்று எண்ணியதும் பாவமாம்! எனக்குத் தேச பக்தி இல்லையாம்! தமிழ், தமிழ்நாடு, தமிழரசு என்று பேசும் வெறி எனக்குப் பிடித்து விட்டதாம்.

அம்மா! இவ்வாறு தமிழ் மாணவர்கள்—நம்மவர்கள் என்னைக் குறை கூறியதைப் பற்றிக் கவலை இல்லை. அதற்கு மேல் நடந்ததுதான் வியப்பாக இருக்கின்றது. இந்தக்

குறையை அவர்களே ஆந்திரர்க்கும், மலையாளத்தார்க்கும், குஜராத்தியர்க்கும் ஆங்கிலத்தில் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு என் எண்ணம் குறுகிய நோக்கம் என்று குற்றம் சாட்டினார்கள். அவர்கள் தங்கள் தங்கள் மொழியையும் நாட்டையும் உயர்த்திப் பேசி ஒற்றுமைப் படுகின்றார்கள். ஆனால் நாம் நம் நாட்டையும் மொழியையும் உயர்த்திப் பேசினால் குறையாம், குற்றமாம், குறுகிய நோக்கமாம்! என் வீட்டு வாசற்படியில் வலிய வந்து உட்கார்ந்து கொண்டு தங்கள் தங்கள் தாய்மார்களின் பெருமைகளைப் பாராட்டுகின்றார்கள். அது குற்றம் அல்லவாம். ஆனால், என் வீட்டின் உள்ளே, என் எல்லையில் இருந்து கொண்டு என்னைப் பெற்ற தாயைப் பற்றி நான் வாய் திறக்கக் கூடாதாம். என்ன கொடுமை, அம்மா!

நான் ஒன்று கேட்டேன்: "உலகம் வாழ வேண்டும் என்று எண்ணாமல் இந்தியா வாழ வேண்டும் என்று எண்ணுவது குறுகிய நோக்கந்தானா?" என்று கேட்டேன். உலகத்தின் மேல் அன்பும் தேசத்தின் மேல் பக்தியும் வேண்டும் என்று தமிழ் மாணவர் ஒருவரே பதில் சொன்னார். என்னால் அப்போதும் அடங்கி யிருக்க முடியவில்லை. "உலகத்தின் மேல் அன்பும் தேசத்தின் மேல் பக்தியும் இருப்பது உண்மையானால், தமிழ் நாட்டின்மீது தமிழனுக்குக் காதல் இருக்க வேண்டும்" என்று வீறிட்டுச் சொன்னேன். அங்கிருந்த தமிழ் மாணவர் அத்தனை பேரும் என்னைத் திரும்பிப் பாராமல் எழுந்து போய்விட்டனர். அவர்களின் ஒத்துழையாமையைக் கண்ட மலையாளத்தாரும் மற்றவர்களும் "தமிழர்களே இப்படித்தான்" என்று எள்ளி நகைத்துக் கொண்டே சென்றார்கள்.

அன்று முதல் என்னைக் காணும்போ தெல்லாம், அன்பு முகம் இல்லை; பொறாமை முகம் மற்ற நாட்டாரிடம் உள்ளது; புழுங்கும் முகமே என் அருமைத் தமிழரிடமும் உள்ளது.

அம்மா! இது நடந்து ஆறு நாட்கள் ஆயின. எண்ணி எண்ணிப் பார்த்தேன். இதுவரையில் காரணம் தெரியவில்லை. இன்றுதான் தெரிந்தது. மற்ற நாட்டு மக்கள் தங்கள் மொழி தங்கள் நாடு என்று பற்றுக் கொண்டு தற்காப்போடு வாழும் வாழ்க்கையை இயற்கையாகவே நெடுங் காலமாக உடையவர்கள். அதனால் அவர்களுக்கு அது குறையாகவும் குற்றமாகவும் தெரிவதில்லை. அவர்கள் இன்று வரையில் தங்கள் வீடுகளுக்குக் கதவும் தாழும் பூட்டும் அமைத்தே பழகி விட்டவர்கள்.

தமிழர்கள் இன்றுதான் அவர்களைப் பார்த்துக் கதவும் தாழும் பூட்டும் அமைக்க முயல்கின்றார்கள். தங்கள் மொழி, தங்கள் நாடு இவற்றை மறந்து பிற நாட்டார்க்கு உதவியாகவே வாழ்ந்து விருந்தோம்பும் கடமையை மேற் கொண்டவர்கள் தமிழர்கள். வெளி நாட்டார்க்காகவே—வாயிற் படியை அண்டி வந்தவர்க்காகவே வீட்டுத் திண்ணையும் கட்டி அரசியல் அறமும் அமைத்து வாழ்ந்த தமிழர்கள் அவ்வாறே இக்காலத்திலும் வாழாமல் தற்காப்புத் தேடி வருவது மற்றவர்களுக்குப் புதுமையாக இருக்கின்றது. அந்தப் புதுமையைக்காண அவர்களுக்கு மனம் பொறுக்க வில்லை.

தமிழர்கள் ஏன் மாறி வரவேண்டும் என்றும் எண்ணிப் பார்த்தேன். கண் மூடி வாழ்ந்து ஏமாந்து நின்ற காரணத்தால் தமிழனிடம் பொருள் வளமும் குறைந்து வறண்டது;

தான் உண்ணாமல் பிறர் வயிற்றையே நிரப்பிய பாவத்தால், தமிழன் கை........தசை சுருங்கி மெலிந்து வாடி நீட்டவும் வலி யிழந்து நிற்கின்றது. இந்த நிலை உற்றதனால் வாழ்க்கைப் போராட்டம் தமிழனையும் தாக்குதலாயிற்று. மற்றவர்களுக்கு உதவும் நிலையில் வள்ளலாக இருந்த தமிழன் மற்றவர்களைப் போல் தற்காப்புத் தேடி வாழ வேண்டிய நிலைக்கு வந்து விட் டான். இதுதான் குறை, குற்றம், குறுகிய நோக்கம்!

மற்றவர்களிடம் பொருள் வளம் மிகுந்து வருகின்றது. அவர்களுடைய கைகள் மட்டும் பொருள் ஈட்டவே பிறந்த கைகளா? தமிழனை வறுமை வாட்டுகின்றது, அதைப் பற் றிப் பேசுவதும் குற்றமா? தமிழன் கை பிறர்க்கு உதவி யாக நீட்டவும் முடியாமல் வாடி மெலிந்து விட்டது. அதை உணர்ந்து கொள்வதும் குற்றமா? நான் இதைப் பற்றி எண் ணுவதும் எழுதுவதும் அரசியலா? குற்றமா? அப்படியா னால், எண்ணும் மூளையையும் எழுதும் கையையும் தமிழனுக் குப் படைத்த படைப்பின் மீதே குற்றம் கூறவேண்டும்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போதுதான் வங்காளத் தில் நோகாளி முதலான சில தாலுக்காக்களில் மக்கள் படும் கொடுந் துன்பங்களைப் பற்றிய செய்தி வந்துள்ளது. செய்தித் தாளைக் கண்டதும் என் மனம் குமுறி நின்றது. இந்த நாட் டில் அரசியல் அறிவு உள்ளதா? அறியாமை உள்ளதா? சமய நெறி வாழ்கின்றதா? வெறி வாழ்கின்றதா? வயிறு எரிகின்றதே!

இவ்வாறு பிறர் துன்பம் கண்டதும் துடிப்பவன் தமி ழனே. என்னை எடுத்துக்காட்டாக வைத்துக் கொண்டு சொல்லவில்லை. என்னுடன் தங்கியுள்ள மாணவர்களில் தமி

ழர்களே இந்தச் செய்தி கேட்டு வருந்தி அல்லல்படுகின்றார்கள். மற்றவர்கள் வழக்கம்போல் அமைதியாகக் காபி அருந்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இப்படித் தலைமுறை தலைமுறையாகப் பிறர் துன்பம் கேட்டுப் பொறுக்காமல் பிறர்க்கு உதவியாக வாழ்ந்த தமிழர்கள் வறுமைக் கடலில் தத்தளிக்கின்றார்கள். கரை யேற முயல்கின்றார்கள். ஆனால் பிறர் என்ன செய்கின்றார்கள்? நீந்தி வருகின்ற தமிழர்களின் மேல் கல் எறிகின்றார்கள். அவர்களோடு சேர்ந்து கொண்டு சில தமிழர்களும் கல் எறிகின்றார்கள். தமிழ்க் கல் வாழ்க என்று வாழ்த்துவதா ?

இவைகளை யெல்லாம் மறந்துவிட மருந்து உண்டா? இருந்தால் எழுத வேண்டுகின்றேன். அரசியல் என் படிப்பைக் கெடுக்காது என்று அப்பாவுக்குச் சொல்லக் கோருகின்றேன்.

அன்புள்ள மகன்,
**எழில்.**

---


# "தமிழ் முரசு"
## சென்னை.

**தனிபிரதி 0—4—0**

**வருட சந்தா 0—3—0**

ஒரு வருட சந்தாவுக்கு குறைந்து கிடையாது.

# கீதா மியூசிகல்

(G. முனிவேலு செட்டி,)

ரேடியோ வியாபாரி

★

**ALBA**

**FERRANTI**

**AMBASSADOR**

★

இன்னும் அனேகவித
ரேடியோக்கள்
கிடைக்கும்.

★

விவரங்களுக்கு :

**8, பிராட்வே (கிளை) சென்னை-1**

**250, லிங்கி செட்டி தெரு**
**சென்னை-1**

# திருப் பொற் சுண்ணம்

மு. அருணசலம்

திருவாசகத்தில், திருப் பொற்சுண்ணம் என்பது, அழகான ஒரு சிறு பகுதி. இருபது பாடல்கள் கொண்டது. சுண்ணம், அதாவது நீராடும்போது உடம்பில் பூசி முழுகுவதற்கு ஏற்ற மஞ்சனப் பொடி (சென்னைப் பரிபாஷையில், நலங்கு மாவு) இடிக்கிற பெண்கள் கூற்றாக, மாணிக்கவாசக சுவாமிகள் இப் பகுதியைப் பாடியிருக்கிறார்.

டன் கணக்காகச் சவுக்காரக் கட்டிகள், தேய்த்து முழுகுவதற்கென்று உற்பத்தியாகி விணியோகமாகிற இந்தக் காலத்தில்கூட, மஞ்சனப் பொடி, வழக்கத்தைவிட்டு மறையவில்லை. சவுக்காரம் வழக்கத்துக்கு வருமுன், ஆடவரும் பெண்டிரும், உடம்பிலுள்ள அழுக்கைப் போக்கும் பொருட்டுச் சுண்ணம் தேய்த்து முழுகி வந்தார்கள். பயறு முதலான சில தானியங்களை யரைத்து மாவாக்கி, அம் மாவுடன் வாசனைப் பொருள்கள் சிலவற்றைக் கலந்து இடித்துச் சுண்ணம் கூட்டி வந்தார்கள். இச்சுண்ணம் ஒரு 'பேடெண்ட்' சரக்கல்ல; அவரவர் வீட்டில் பெண்களே இதைத் தயாரித்து வந்தார்கள்.

வேலை செய்வதில், முன்னெல்லாம், இன்பம் இருந்தது. நாகரிக முதிர்ச்சியின் பயனாய், வேலை என்றால் இன்று இழிவானது என்ற உணர்ச்சி, படித்த கூட்டத்தாரிடையே மிகுதியாகிவிட்டது. துணி துவைத்தல், பாத்திரம் துலக்குதல் முதலிய சாமானியமான அன்றாட அலுவல்களை அவரவர் செய்துகொள்வது அகௌரவம் என்ற அபிப்பிராயம், இன்

றைய வாழ்க்கை முறைக்கு அடிப்படையாகி விட்டது. ஆனால், கொஞ்ச நாளைக்குமுன் நிலைமை இப்படி இருக்கவில்லை. தம்தம் வேலைகளைத் தாமே செய்து கொள்வதில், எல்லா மக்களும் - ஆடவரும், பெண்டிரும், முதியவரும் இளைஞரும், செல்வரும் வறியவரும் - ஓர் இன்பத்தையே கண்டார்கள். இத்தகைய சாமானிய வேலைகளில் சுண்ணமிடித்தல் ஒன்று. 'பெரிய' மனிதர்கள் என்பவர்கள் வீட்டில் கூட, பெண்கள் சுண்ணமிடிப்பார்கள். வேலைக்காரர் முதலியோரை ஏவிச் செய்துவைக்கிற சுண்ணத்தில் யாருக்கும் திருப்தி யுண்டாவதில்லை.

வேலையே இன்ப மளித்தது என்பது ஒருபுறமிருக்க, அவ்வின்பத்தைப் பெருக்கவும் வழியிருந்தது. சுண்ணமிடிக்கும்போது, ஒரு பெண் மட்டும் தனியே இடிப்பதில்லை. இரண்டு மூன்று வீடுகளிலுள்ள பெண்கள் ஒன்றுகூடி, எல்லோருக்கும் வேண்டியிருக்கும் சுண்ணத்தைச் சேர்ந்தாற்போல் இடித்துக்கொள்வார்கள். பெண்கள் பலர் சேர்ந்தால், ஒரே உற்சாகமும் கும்மாளமுமாய்த்தான் இருக்கும். இவ்வுற்சாகமானது, வெறும் வம்புப் பேச்சாய் வெளிப்படாமல், அழகான பாட்டாக வெளிப்படும்.

பாட்டினால் சிறந்த பயனும் உண்டு. உலக்கை எடுத்து ஓச்சி நெடுநேரம் உரலில் சுண்ணமிடிக்கும்போது, வேலையில் சற்று நேரமானதும், சோர்வு தோன்றுதலுங்கூடும். ஆனால், பலர் கூடிப் பாடும்போது, நெடுநேர மானாலுங்கூட, சோர்வு தோன்றுவதில்லை. இவ்வாறு வேலையிலுள்ள இன்பத்தால் பிறந்த பாட்டு, வேலையில் வரும் சோர்வைப் போக்கவும் உதவுகிறது.

மாணிக்கவாசக சுவாமிகள், ஆனந்தமான தமது ஆன்ம அநுபவங்களை யெல்லாம் மாணிக்கம் போன்ற பாடல்களாய்ப் பொழிந்துகொண்டே பல தலங்களையும் வழிபட்டு வரும்போது, ஆங்காங்கு, பெண்கள் மேற்கூறியவாறு இன்பமாய் வேலை செய்வதையும், தங்களை மறந்து பாடல் பாடுவதையும் கண்டார். வேலை செய்துகொண்டே அவர்கள் பாடிய பாடல்கள், தமது கருத்தை யெல்லாம் வெளியிடச் சிறந்த கருவியாக அமைதல் கூடுமென்பதையும் உணர்ந்தார். அவ்விதமே, சென்ற இடந்தோறும், பெண்கள் விளையாட்டையும் வேலையையும் ஒட்டிய பாடலாகவே தம் அநுபவம் அவ்வளவையும் பாடிவந்தார். இவ்வாறு அவர் பாடிய பல பாடல்களில், திருப் பொற் சுண்ணமும் ஒன்று.

கடவுள் என்ற தத்துவத்தைக் கண்ட மனிதன், தனக்கு விருப்பமானவற்றை யெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து வந்தான். அந்தக் கடவுளுக்கு உருவம் சமைத்த போது, தன் போன்ற மனித உருவத்தையே அதற்கும் தந்தான். தனக்கு விருப்பமான உடை, உணவு, அணிகலன், பூ, நீர் முழுக்கு, சாந்து முதலியவற்றை யெல்லாம் கடவுளுக்கே கொடுத்தான். இதன் பயனாக, கடவுளுக்குக் கோயில், திருவுருவம், வழிபாட்டுக் கிரமம், திருவிழாக்கள் முதலியன வெல்லாம் தோன்றலாயின.

சுண்ணமும் இதற்கு விலக்கன்று. மக்கள் இடித்து உபயோகிக்கிற சுண்ணத்தைக் கடவுளுக்கே உரியதாக்கிவிட்டார், மாணிக்க வாசகர். அவர் பாட்டில், பெண்கள் சுண்ண மிடிக்கிறார்கள். அப் பெண்கள் யாவரும், ஐயன் அணிதில்லை வாணன் திருவருளிலே தோய்ந்தவர்கள். ஆதியும் அந்தமும் ஆய அச் சேவகன் நாமங்கள் பாடிப் பாடி, அவன் 'ஏழை

அடியோமை ஆண்டு கொண்ட நயந்தனைப் பாடி நின்றாடி யாடி', அவன் நீராடுவதற்குச் சுண்ண மிடிக்கிறார்கள். அவனுக்குரிய சுண்ணமென்றால், அது வெறுஞ் சுண்ண மல்ல, பொற் சுண்ணமுமாய் விடுகிறது.

உண்மையான பக்தியும், ஆனந்த அனுபவமும் காரணமாக, மாணிக்கவாசகர், எந்நேரமும் எந்த நிலையிலும் இறைவனுடைய பெருங் கருணையாகிய அருள் வெள்ளத்திலே ஒன்றி நிற்கிறார். அவருடைய பேரனுபவத்தை அறியாத உலகத்தார் அவரைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்; அவரோ, நாட்டாருக்கு அவ்வனுபவம் உண்டாகவில்லையே என்ற இரக்கமும்; அறியாது தம்மைப் பித்தனென்கிறார்களே என்ற எண்ணமும் மேலிட்டுச் சிரிக்கிறார்.

மாணிக்கவாசகருடைய பேரின்ப அனுபவ நிலைக்கு மட்டு மல்ல, சாமானிய உலக வாழ்க்கைக்குமே இது பொருந்துவதாகும். ஒரே நோக்கத்தைக் கொண்டு அதற்காகவே வாழ்பவர்களை உலகம் பித்தரென்று கூறிச் சிரிக்கத்தான் சிரிக்கிறது. இப்படிச் சிரிக்கிற உலகைக் கண்டு அவரும் சிரிக்காமல் என்ன செய்வது?

பெண்கள் சுண்ண மிடிக்கிற சூழ் நிலையில் கலந்துவிட்ட மாணிக்க வாசகர், இந்தச் சிரிப்பையும் ஒரு பாடலில் வெளிப்படுத்துகிறார். எல்லாப் பாடல்களையும் குறிப்பிட முடியாது விட்டாலும், இவ்வொரு பாடலை மட்டும் இங்கே குறிப்பிடலாம்.

இறைவனுக்கென்று பெண்கள் சுண்ண மிடிக்கிறார்கள். இடிக்கும்போது, பல பெண்கள் கூடியுள்ளமையால், எங்கும்

இத் தொண்டர்களின் ஆரவாரமா யிருக்கிறது. இவர்கள் அணிந்துள்ள அணிகலன்கள் ஒன்றோடொன்று மோதி ஒலி செய்கின்றன.

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப,
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப,
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப,
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப,
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

இந்த விதமாகப் பெண்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு ஆனந்தமாய்ப் பாடிச் சுண்ண மிடிக்கிறார்கள் என்ற பொருளில் மாணிக்க வாசகர் திருப் பொற் சுண்ணம் பாடி யிருக்கிறார்.

ஆனால், சைவ மக்கள் சமூகத்தில் இப் பாட்டை எப்படி உபயோகிப்பார்கள் என்பது அவருக்குத் தெரியாது. ஆனந்த வெளியீட்டுக்கான இப் பாட்டைத் தமிழ் நாட்டில் சிலபகுதி களில் துக்கத்துக்கென்றே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். சென்னை முதலான சில இடங்களில், சைவம் முற்றிப் போன வீடுகளில், யாரேனும் இறந்து போனால், அப்போது பிரே தத்தை நீராட்ட வேண்டிய பொடி இடிக்கும்போது, இப்பாட் டைப் பாடுகிறார்கள். இதில் எவ்விதப் பொருத்தமும் காணப் படவில்லை. அல்லாமலும், இப் பாட்டு துக்கத்துக்கென்றே ஏற்பட்டது, மரணம் தவிர மற்றச் சமயங்களில் இதைப் பாடக் கூடாது, சாதாரண காலத்தில் இதைப் பாடவே

கூடாது என்ற கருத்து, பழுத்த சைவக் குடும்பங்களில் காணப்படுகிறது. என்ன விபரீதம்!

திருவாசகத்தில், திருப் பொற் சுண்ணம் என்னும் பதிகத்துக்கு 'ஆனந்த மனோலயம்' என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படி யிருக்க, இப் பாட்டு, துக்கத்துக்குத்தான் என்ற எண்ணம் எப்படித்தான் வந்ததோ தெரியவில்லை. சாகிற தருணத்தில், அயலில் இருப்போர் திருவாசகம் படிப்பது என்ற ஒரு பழக்கம் வழங்கி வருகிறது. வாழ்கிற காலமெல்லாம் எப்படியேனும் வாழலாம், சாகிற காலத்தில் மட்டும் சங்கரா சங்கரா என்றால் போதும் என்ற கொள்கையை யொட்டியதுதான் இது. இது எப்படியேனும் போகட்டும்; திருவாசகத்துள் ஓரங்கம் என்ற முறையில் திருப் பொற் சுண்ணத்தையும் படிப்பது பற்றி நமக்குக் கவலை யில்லை. ஆனால், இதற்கென்று விசேஷப் பொருள் கற்பித்து, அசுபத்துக்கென்றே இதை ஒதுக்கி வைத்திருப்பது பெரிதும் தவறான வழக்கம்.

ஆனந்தமும் துக்கமும் ஒன்றுதான் என்று காண்கின்ற பக்குவம் வந்த பரம ஞானிகள் வேண்டுமானால் இவ்விதம் கொள்ளட்டும். நம்மைப் பொறுத்தவரையில், சில இடங்களில் இன்று வழங்கும் மேற் கூறிய வழக்கம் நிச்சயம் மாறவேண்டும். இவ்விதம் அசுபத்துக்கென்றே இப் பாடலை ஒதுக்கி வைத்தது, அறியாமையால் நேர்ந்த விபரீதமாகும், அறியாமை ஒழிய வேண்டியது தானே? இதன் பொருளை யாரேனும் உணர்ந்திருந்தால், அவர்கள் இப்படி இதற்குச் சந்தர்ப்பம் கற்பித்திருக்கமாட்டார்கள்.

ஆனந்தமான பெண்கள் பாட்டையும் ஆட்டத்தையும் கண்டு களித்த மாணிக்க வாசகர், தம் பாட்டுக்கு இப்படி யோர் உபயோகம் ஏற்படுமென்று கருதியிருக்க மாட்டார். இந்த மாதிரிப் பாடுவதை நிறுத்தச் செய்வது தமிழ் மக்கள் கடன். மற்றப்படி, இதை எப்போதும் ஆடவரும் பெண்க ளும் குழந்தைகளும் ஆனந்தமாய்ப் பாடி ஆடலாம். பாட சாலை தோறும் பயிலலாம். 'பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும், பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித், தேடு மின் எம்பெருமானைத் தேடிச், சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி, ஆடுமின்' என்று அடிகள் கூறியவாறு, எந்தச் சமயத் திலும் யார்தான் பாடக் கூடாது? தேடக் கூடாது? ஆடக் கூடாது?

---

நவ நாகரிகமான
ஆபரணங்களுக்குச் சிறந்த இடம்!
தங்க நகைகளும் வெள்ளிச்சாமான்களும் மொத்த
மாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்

எஸ்.ஆர்.
திருப்பூர், 8o.

# ஒன்றுபட்ட தமிழகம்

குயிலன்

சுடர்மிக்க எதிர்காலம் வருகின்ற போது
  தூங்காது சோம்பாது விழிப்புற்று நிமிர்வீர்
இடர்தன்னைப் பரிசாகத் தருகின்ற ஆட்சி
  இனிதான தமிழ்நாட்டைப் பலவாகப் பிய்த்து

உடல்வேறு தலைவேறு கால்வேற தாக்கி
  உளம் வேறு படுதற்குச் சதிசெய்து வைத்தார்
கடல்போன்ற தமிழ்வீரர் கூட்டத்தை அந்தோ
  கரைபோட்டுத் தடைசெய்ய யார்க்கென்ன உரிமை?

ஆந்திரர், கேரளர், கன்னடர் தம்மை
  அவ்வாறே துண்டாடி நம்மோடு சேர்த்தார்.
மாந்தளிர்க் குயில்பாட மயிலாடும் நாட்டீர்
  மறமிக்க தமிழ்மக்கள் படைசேர்ந்து வாரீர்!

கோலாரில் மண்வெட்டி, கல்வெட்டி இருளாம்
  குகைகட்குள் சென்றங்குத் தங்கத்தைச் சேர்க்கும்
வேல்வீரர் தமிழ் மக்கள் குடிவந்த அவரை
  வேறாக நமைவிட்டுப் பிரித்தற்கு விடவோ?

தஞ்சைக்கு நிகராக நன்செய் திருத்தி
  தமிழ் மக்கள் வாழ்கின்ற நாஞ்சிலை இனியும்
வெஞ்செயல் சி. பி. யின் கால்களின் கீழே
  விடமாட்டோம் விடமாட்டோம் விடமாட்டோமினிமேல்.

புதுவையும், காரையும், புதுக்கோட்டையதுவும்
  புகழ்மிக்க யாழ்ப்பாணம், கோலாரைச் சேர்த்து
புதிதாக ஒருநாடு தமிழ்நாடு தோற்றி
  பொதுமக்கள் ஆட்சியில் ஓங்கிடச் செய்வோம்.

தமிழ்நாடு ஒரு நாடு, தனிநாடு, யார்க்கும்
  தலைதாழ்த்த வேண்டாத புதுநாட தாகி
அமிழ்தான தமிழாலே அரசாட்சி செய்யும்,
  அது மிக்க தூரத்தில் இலைஇன்று காண்போம்.

---

DEMAND

**PRABHAT INK**

High Grade
for Fountain Pens

Available From

**PRABHAT TRADERS**

Stationers, General Merchants, Importers & Exporters

**4 & 5, Badrian Street, G. T., Madras.**

*Tele:*—PRABAKAR, Madras.

*Branches at:*

KUMBAKONAM, TINNEVELLY.

# சுய நிர்ணயப் பிரகடனம் வேண்டும்!

ம. பொ. சிவஞானம்

'துஞ்சும் பொழுதினும், தாயின் பதத் தொண்டு நினைந்திடும் வங்கத்தினோர்' என்று வங்காளியரின் மங்காத தேச பக்தியை வாயார வாழ்த்தினார் பாரதியார்.

தேச பக்தியில் மட்டு மல்ல; இன உணர்ச்சியிலும் வங்காளியர் இதர தேசிய இனங்களுக்கு, வழி காட்டியாக இருந்தனர். அன்று லார்ட் கர்ஸான் வங்கத்தைத் துண்டாடிய போது, வங்காளியரை 'ஹிந்து' வென்றும், 'முஸ்லீம்' என்றும் பிரித்தபோது, 'வங்கம் வங்காளிகளின் தாயகம்—அதைப் பிளக்காதே' என்று ஹிந்து முஸ்லீம் வேற்றுமையின்றி இன உணர்ச்சியால், இணைந்து நின்று போராடி வெற்றியும் பெற்றனர். அத்தகைய வீர வங்காளியர் இன்று சுதந்திரமா? சுடுகாடா? என்ற சூழ்நிலையில் வாழ்கின்றனர். இன உணர்ச்சி மாய்ந்து, மத வெறி தாண்டவமாடுகிறது. வங்கப் பிரிவினையின் போது ஏகாதிபத்தியம் தோல்வி யுற்றது போல் தோன்றினும் இன்று வெற்றிக் களிப்புடன் வீற்றிருக்கின்றது.

வங்காளத்தில் இன்று நடக்கும், கோரக் கொலைகளின் காரணம் இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளே யாகும்.

"இந்தியரனைவரும் பிரிக்க முடியாத ஒரே தேசிய இனம், ஆகவே அகண்ட ஹிந்துஸ்தானம்தான் இந்தியாவின் லட்சியம்". என்பது தேசீய வாதியின் போதனை.

" இந்துக்களும், முஸ்லீம்களும் சேர்ந்து வாழ முடியாத அளவுக்கு, இயற்கையிலேயே பிரிந்து நிற்கும் இரண்டு இனங்கள். ஆகவே பாகிஸ்தான் ஒன்றுதான் முஸ்லீம்களின் லட்சியம்" என்பது முஸ்லீம் லீகின் சாதனை.

இந்த போதனையும் சாதனையும் இந்தியாவை எவ்வளவு தூரம் கலகப் பாதையில் கொண்டு சென்றன என்பதற்கு வங்கக் கலகமே தக்க சான்றாகும். ஆகவே, வங்கத்தில் நடக்கும் கோரக் கொலைகள் இந்தியா வெங்கும் பரவாமலிருக்க வேண்டுமாயின், அதன் மூல காரணமான அகண்ட இந்துஸ்தான்—பாகிஸ்தான் ஆகிய இரண்டு திட்டங்களையும் கைவிட்டு புதியதோர் திட்டம் காணவேண்டும்.

அகண்ட இந்துஸ்தான்—பாகிஸ்தான் ஆகிய இரண்டும் தரத்தில் வேறாக இருப்பினும், தவறில் ஒன்று போலத்தான். மேலும், இவை யிரண்டும் மக்களின் கோரிக்கை யல்ல. முன்னதில் முதலாளித்துவம் முளை எடுக்கின்றது. பின்னதில் சமய வெறி சார்ந்து நிற்கின்றது; ஆகவே இவை யிரண்டும் வெற்றி பெறப் போவதில்லை; வெற்றி பெறவும் கூடாது.

பேசும் மொழியும், வாழும் நாட்டின் இயற்கையும் இந்திய சமுதாயத்தைப் பல்வேறு இனங்களாகப் பிரித்து வைத்திருக்கிறது. அவர்களது பழக்க வழக்கங்களும் கூட வெவ்வேறு விதமாகவே இருந்து வருகின்றன ஒவ்வொரு இனத்தவரும் தாம் வாழும் பிரதேசத்தையே தாயகமாக எண்ணுகின்றனர். உதாரணமாக, தமிழர் தமிழகத்தையே தாயகமாகக் கருதுகின்றனர். அதேபோல், பஞ்சாபியர் பாஞ்சாலத்தையே தாயகமாக எண்ணுகின்றனர். இந்த அடிப்படையிலேயே ஒவ்வொரு தேசீய இனத்தவரும் தங்கள் தங்கள் தாயகத்தின்

விடுதலையைக் கோரி சுதந்திரப் போரில் ஈடு பட்டனர். ஆகவே சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனமும் தங்கள் தங்கள் தாயகத்தில் சுதந்திரக் குடியரசை நிறுவிக்கொள்ள, உரிமை இருக்க வேண்டும்.

அதுபோலவே, இந்தியாவின் ஐக்கிய அரசாங்கம் என்பது, சுதந்திரக் குடியரசுகள் தமது நன்மைக்காகவும், இந்தியாவின் பாதுகாப்பிற்காகவும் தாமாகவே இணைந்து ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு சமஷ்டியாகவே இருக்க வேண்டும்.

இதைத் தவிர, தற்கால தேசிய வாதி சொல்லும் அர்த்தத்தில், அகண்ட இந்துஸ்தானம் என்பது உண்மைக்கும் ஜன நாயகத்துக்கும் பொருந்தாத கோஷமாகும்.

மற்றும், மொழி, பண்பாடு, வாழ்கைத் தொடர்பு ஆகிய வற்றால் மத வேற்றுமை யின்றி கலந்துள்ள தேசீய இனங்கள் ஒவ்வொன்றையும், மதக் கோடரி கொண்டு பிளந்து இந்து வென்றும் முஸ்லீமென்றும் இரு கூறுக்கும் பாகிஸ்தான் திட்டமும் இன உணர்ச்சியுள்ள எந்த மாகாணத்தவரும் ஏற்க முடியாத ஒரு திட்டமாகும். மேலும், அரசியலில் மதத்தைப் புகுத்துவது சுய நலக்காரர்களின் சூழ்ச்சி. மக்களுக்கு அதனால் ஒரு நன்மையும் உண்டாக முடியாது.

தேசீய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகா சபையும் இந்த சமயச் சுழலில் சிக்குண்டு தவிக்க நேர்ந்தது வருந்தத் தக்கதாகும். தேசீய இனங்களின் ஐக்கிய முன்னணியாக ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் இன்று மதங்களிடையே சமரசம் செய்யும் வேலையை மேற்கொண்டு விட்டது. இதற்குக் காரணம் என்ன? காங்கிரஸ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டப் பாதையில் போய்க் கொண்டு இருக்கும் வரையில் வகுப்பு

வாதிகள் சந்தடியற்றுக் கிடக்கின்றனர். எப்பொழுது காங்கிரஸ் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் காண விரும்புகிறதோ அப்போதெல்லாம் அது வகுப்பு வாதிகளின் வாசலில் அவர்களின் தயவுக்குக் கையேந்திக் காத்துக் கிடக்கும் நிலைமை ஏகாதிபத்தியம் ஏற்படுத்துகிறது.

ஆகவே, சமரசத்தின் மூலம் வெள்ளையரை இந்தியாவிலிருந்து வெளியேற்றி விடலாம் என்ற நம்பிக்கையைக் காங்கிரஸ் கைவிட வேண்டும். மற்றும் அகண்ட இந்துஸ்தான், பாகிஸ்தான் ஆகிய இரண்டு திட்டங்களையும் தீயிலிட்டுப் பொசுக்கிச் சுதந்திர இந்தியாவில் எல்லா தேசீய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு என்ற பிரகடனத்தை வெளியிட வேண்டும். மத ஸ்தாபனங்களுடன் சமரஸம் பேசுவதும், மக்கள் உரிமையை நசுக்கும் சமஸ்தான மன்னர்களை மத்தியஸ்தர்களாகக் கொள்வதும் நிறுத்தப்பட வேண்டும்.

சுதந்திரம் இதோ வந்து விட்டது—அதோ வந்து விட்டது என்பதெல்லாம் ஏகாதிபத்தியப் பித்தலாட்டத்திற்கு நாட்டை இரையாக்குவதைத் தவிர பயனொன்றும் காணமுடியாது ஆகவே, காங்கிரஸ் தேசீய இனங்களின் சுய நிர்ணயக் கோரிகையைப் பிரகடனம் செய்து நாட்டை இறுதிப் போருக்குத் தயார் செய்யுங் காலம் வந்து விட்டது. காங்கிரஸ் இதைச் செய்யத் தவறுமானல் ஏகாதிபத்திய—வகுப்பு வாதிகளின் கூட்டுறவால் இந்தியாவின் சுதந்திர உணர்ச்சி நசுக்கப் படுமோ என்று ஐயுறுகின்றேன். வங்கக் கலகமே இதற்குத் தக்க சான்ருகும்.



கப்ப லோட்டிய தமிழன்—வ. உ. சிதம்பரம் பிள்ளை

# நன்றி மறவாதீர் !

ம. பொ. சிவஞானம்

1908-ம் ஆண்டில் ஒரு நாள். திருநெல்வேலி, செஷன்ஸ் கோர்ட். குற்றவாளிக் கூண்டில் ஒரு வீரத் தமிழன். நீதிபதி ஆசனத்தில் ஆங்கிலேயன் அமர்ந்து, தீர்ப்பளிக்கிறான். ஆம்! ஆளப் பிறந்தவனைப் பற்றி ஆளுபவன் தீர்ப்பளிக்கிறான். கோர்ட்டில் திரளான மக்கள் கூடி இந்த அற்புதத்தைக் காண் கின்றனர்.

தீர்ப்பு வருமாறு:—

"குற்றவாளியின் எலும்புக் கூடும் ராஜத் துரோக மானது. அவருடைய பேச்சைக் கேட்டால் செத்த மனித னும் உயிர் பெற்றெழுவான். அடிமைப் பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்.

குற்றவாளி கப்பலோட்டியது வெள்ளையர்களை இந் நாட்டை விட்டு ஓட்டுவதற்கேயாகும். இது அபாயமான காரியம். ஆகவே, இரண்டு ஜன்ம தண்டனை விதிக்கிறேன். இரண்டையும் ஒன்றின்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டு மென்றும் உத்தரவிடுகிறேன்." இதுதான் நீதிபதி அளித்த தீர்ப்பின் சுருக்கம்.

யார் அந்தக் குற்றவாளி? அவர்தான் வீரத் தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை! அவர் செய்த குற்ற மென்ன? என்று பார்ப்போம்.

1906-ம் ஆண்டில் சிதம்பரனார் அரசியலில் பிரவேசித் தார். 1908-ல் சிறை புகுந்தார். இடையே இருந்த இரண்

டாண்டுகளில் சிதம்பரனார் செய்த அரசியற் புரட்சி செப்பும் தரமன்று.

வங்காளத்தில் உணர்ச்சியளவில் எழுந்த சுதேசி இயக்கத்தைத் தூத்துக்குடியில் செயலளவில் நிறைவேற்றியவர் சிதம்பரனார். வெள்ளையர் கப்பல் கம்பெனிக்குப் போட்டியாக சுதேசிக் கப்பல் கம்பெனியைத் துவக்கினார்; தூத்துக்குடியில் வெள்ளையர்களால் நடத்தப்பட்ட ஹார்வி மில் தொழிலாளர்களைப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தார்; மறைவிடத்தில் கூட 'வந்தேமாதரம்' என்று சொல்லப் பயந்த அந்தக் காலத்தில், கூட்டம் கூட்டி 'வந்தேமாதரம்' என்று கோஷிக்கச் செய்தார்!

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில், சலவைத் தொழிலாளி, க்ஷவரத் தொழிலாளி, வண்டி யோட்டுவோர், பலகாரக் கடைக்காரர் ஆகிய பாட்டாளி மக்களைப் படை திரட்டினார். சிதம்பரனாரின் ஆணை பிறந்தால், தூத்துக்குடி மக்கள், அனலையும் விழுங்கத் தயாரா யிருந்தனர்.

ஆம்! இந்தியச் சுதந்திரப் போரில் தமிழ் நாட்டுத் தளபதி வீரச் சிதம்பரனார்.

தூத்துக்குடியில் சுதேசி கிளர்ச்சி வலுத்தது. வேலை நிறுத்தப் போராட்டம் வீறிட்டு எழுந்த காலை, தூத்துக்குடி வெள்ளையர்கள் நகரில் இருக்க அஞ்சி, கடலில் சென்று கப்பலில் காலங் கழித்தனர். ஆம்! வெள்ளையரை வெளியேற்ற வேண்டுமென்ற ஆசை வங்காளியின் உள்ளத்தில் அரும்பெடுத்த காலத்தில், அவனை வெளியேற்றிப் பார்த்த பெருமை தமிழர் தலைவர் சிதம்பரனாருக்கே தனி உரிமை. இவ்வாறாக அரசியலில் புகுந்த இரண்டே ஆண்டுகளில், ஏகாதிபத்திய

கப்பல் கம்பெனிக்கு எதிர் கம்பெனி துவக்கியதற்காக, ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆண்மை யூட்டி, ஐரோப்பியரின் மூல தனத்தை அழிக்க முயன்றதற்காக, தொழிலாளர்களைப் படை திரட்டித் துரைத்தனத்தை எதிர்த்ததற்காகத்தான், ஆங்கில நீதிபதி மேற்சொன்னவாறு இரண்டு ஜன்ம தண்டனைகள் விதித்தார். இரண்டு வருட தேச சேவைக்குப் பரிசு இரண்டு ஜன்ம தண்டனை!

சிறையில் சிதம்பரனார் பட்ட துன்பம் கொஞ்சமன்று. தங்கப் பணி பூண்ட கைகளில் கழட்டாப் பெரு விலங்கு; பட்டுடுத்த பொன் மேனியில் பருத்தி ஆடை; வீரத் திரு மார்பில் விடுதலையின் நாளைக் குறிக்கும் கட்டைத் தாலி; மயி ரிழந்த மொட்டைத் தலை; இதுதான் சிறையில் சிதம்பரனா ரின் தோற்றம்.

அறநூல் எழுதிய அவரது கைகள் சிறையில் செக்கு வலித்தன, கல்லுடைத்தன.

அறுசுவை யுண்டு அரசர் போல் வாழ்ந்த சிதம்பரச் சீமான் சிறையில் கேழ்வரகுக் கூழ் உண்டார்.

சிதம்பரனாரின் சிறைத் துன்பத்திற்குப் பாரதியார் பாடலே சான்று பகரும்.

> "மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
> நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ"
> "மாதரையும் மக்களையும் வன்கண்மையால் பிரிந்து
> காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ."

என்ற வரிகள் சிதம்பரனாரின் சிறைத் துன்பத்தையே சித்தி ரித்துக் காட்டுகின்றன அல்லவா?

சிதம்பரனாரை "மேலோன்" "நூலோன்" "காதல் இளைஞன்" என்றெல்லாம் கூறிக் கடவுளுக்கு அறிமுகப் படுத்துகிறார்; முப்பது வயதில், காதல் பருவத்தில், மனைவியைத் துறந்ததை, மக்களைப் பிரிந்ததை, கண்ணனூர்ச் சிறையில் கருத்தழிந்து வாடுவதை இறைவா நீ காணாயோ! என்று கதறி அழுகிறார் பாரதியார்.

ஆம்! பாரதியார் அழுத கண்ணீர் மீது ஆணை வைத்துக் கூறுகின்றேன். தமிழர்களே! நன்றி மறவாதீர். சிதம்பரனாரின் நினைவு நாள் நவம்பர் 18உ வருகின்றது. கல்லூரி மாணவர்களே! தொழிலாளர்களே! எழுத்தாளர்களே! உங்கள் அனைவரையும் வேண்டுகின்றேன். தமிழகத்தின் ஆதித் தலைவனுக்கு, தமிழ்த்தாயின் வீரப் புதல்வனுக்குத் தலை வணங்குங்கள். அவர் துவக்கி வைத்த சுதந்திரப் போர் வெல்க என்று முழங்குங்கள்! அவரைப் பெற்றெடுத்த வீரத் தமிழ் மரபு வாழ்க என வாழ்த்துங்கள்! வாழ்க சிதம்பரனார் நாமம்!

---

திருத்தம்

வருட சந்தா 3 அணா என்பதை 3 ரூபாய் என்று திருத்திக் கொள்ளவும்

விரைவில் தயாராகிறது!

# ஸ்ரீ கண்ணா பிலிம்ஸ்

(புரோப்ரைட்டர்ஸ் C.K. & சன்ஸ் புதுக்கோட்டை)

தயாரிக்கும்

# திருமழிசை

## — ஆழ்வார் —

— இசையரசு —

## M.M. தண்டபாணி தேசிகர்

— மற்றும் —

R. பாலசுப்பிரமணியம் „ S.V. சுப்பையா
K.K. பெருமாள் „ M.R. சுவாமிநாதன்
T.S. துரைராஜ் மாஸ்டர் பத்மநாபன்
M.S. வேலப்பன் வித்வான் சீனிவாசன்
நாராயணசுவாமி „ „ ப்ரேமாவதி „
தேவசேனா „ குமாரி கல்யாணி
சிவபாக்கியம் „ „ „ லக்ஷ்மி

— நடிப்பது —

கதை வசனம்: P.S. செட்டியார்
பாட்டு: பாபநாசம் சிவன்
சங்கீதம்: S.V. வெங்கட்ராமன்
நடனம்: R.T. கிருஷ்ணமூர்த்தி
ஸ்டூடியோ: ஸோபனசலா



தனபால்

# குயில்

மாதமொரு புத்தகம்

ஆசிரியர் :
பாரதிதாசன்

நவம்பர் கடைசி வாரத்தில் வெளிவருகிறது

**தனிப்பிரதி விலை 0—8—0**

தபால் செலவு வேறு

**வருடசந்தா (உள்நாடு) ரூ 6—0—0**

**,, (வெளிநாடு) ரூ 7—8—0**

**ஏஜண்டுகள் தேவை**

விவரங்களுக்கு:

**குயில் நிலையம்**

திருவல்லிக்கேணி • சென்னை



# "சினிமா ரசிகன்"

**(இலங்கையின் உயர்தரமாதவெளியீடு)**

நவம்பர் மாத இதழிலே! மூவர்ண அட்டையில்—ஸ்ரீமதி **பானுமதி** உள்ளே ஆர்ட்காகிதத்தில்—அழகியபடங்கள். "லவங்கி"—"வித்யாபதி" படவிமர்சனங்கள். ஸ்டுடியோச் செய்திகள் - நடிக - நடிகையரைப் பற்றிய ரசமான குறிப்புகள். ஸ்ரீ லக்ஷ்மிகாந்தனைப் பற்றிய ருசிகர கட்டுரை. மற்றும் யோகி சுத்தானந்த பாரதியார், ஸ்ரீ வ. உ. சி. சுப்ரமணியம் முதலிய பிரபல எழுத்தாளர்களின் கவிதை-கதைகளும் வருகின்றன.

**தனிப்பிரதி ½ ரூ தான்.**

வருடசந்தா ரூ 6. ஆறு மாத சந்தா ரூ 3.

எல்லா இடங்களிலும் டெபாசிட்டுடன் ஏஜண்டுகள் தேவை

**'சினிமா ரசிகன்' ஆபீஸ்,**

207-A, பார்பர் ஸ்ட்ரீட், : : கொழும்பு.

# "ஸ்வாதி"—கூந்தல் தைலம்

1. கூந்தலை சீவும் பொழுதாவது அல்லது விரல்களில்களி னால் கோவும் பொழுதாவது, உங்கள் தலை மயிர் உதிர் கின்றதா?

2. காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் பொழுது தலையணைமேல் மயிர்க் கொத்துக்கள் ஒட்டிக் கொண் டிருக்கின்றனவா?

அப்படி யிருந்தால், இதன் காரணத்தை நீங்கள் சோதிக்க வேண்டும். வெகு நாள் சீக்காயிருந்து எழுந்த பிறகா வது, அல்லது ஸ்திரீகளா யிருந்தால் பிரசவத்திற்குப் பிறகாவது, இம்மாதிரி மயிர் உதிரும் முறையை நோக் கலாம். இதற்குக் காரணம் தேக பலவீனத்தினால் மயிர் வளர்வதற்கு வேண்டிய உணவுப் பொருள் குன்றி யிருப் பதுதான்

அதற்கு, கூந்தல் வேர்களை பலப்படுத்த நல்ல கூந்தல் தைலம் உபயோகித்தால் பலனுண்டாகும்.

"ஸ்வாதி" கூந்தல் தைலம், நம் முன்னோர்கள் சிபார்சு செய்யும் ஆயுர்வேத மூலிகைகளி லிருந்து எடுத்தச் சத்துக்களும், மேல் நாட்டு ரஸாயன சாஸ்தி ரங்களில் சிபார்சு செய்யப்பட்ட மருந்துகளும் அடங் கிய தைலம்.

**ஸ்வாதி பிராடக்ட்ஸ்.**
த. பெ. 655, சென்னை.



Printed at The Mercantile Press, 2/45. Muthumari Chetty Street, Mannady Madras. O. H. No 264-D.,